<u>**சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.**</u>

<u>**அ.வ எண்: 106/2011 வெங்கடேஷன்(வாசா1) தேதி: 02.03.2026.**</u>

வா<u>**சா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**</u>

பிராது 2ம் தபசில் சுற்றி இருக்கக்கூடிய வேப்பம்மரம், தேக்கு மரம், எலுமிச்சை மரம், மாம்மரம் ஆகியவற்றை அகற்றி தரும்படி பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கையிலும் மேற்படி மரங்கள் இருப்பதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராது 2ம் தபசில் இருக்கக்கூடிய மரங்களை பொருத்து அதற்கு மதிப்பீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த தேக்கு மரங்களுக்கு சுமார் 40 வயது இருக்கும் என்றால் இல்லை. சுமார் எத்தனை வயது இருக்கும் என்றால் 15 முதல் 20 வயது இருக்கும். தேக்கு மரங்களை அகற்றுவதற்கு வணத்துறை மற்றும் வருவாய் துறையினர் உதவியுடன் அகற்ற வேண்டும் என பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். எங்கள் தரப்பில் அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பில் எமது கட்சிகாரருக்கு தெரியாமல் ஒரு காம்பவுண்ட் சுவரை எனது கட்சிகாரரின் இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து 2001 ம் வருடம் ஆரம்பத்தில் கட்டியுள்ளிர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த விபரம் 2009 வருடம் அலந்து பார்க்கும்போது அந்த விபரம் தெரியவந்தது. 2009ம் வருடம் நில அளவையர் மூலம் அளந்து பார்த்தோமா அல்லது நாங்களாக அளந்தோமா என்றால் சர்வேயர் உதவியுடன் தான் அளந்தோம். சர்வேயர் மூலம் படிக்கட்டி அளந்ததாக மேறப்டி அறிவிப்பில் கூறப்படிவில்லை என்றால் சரிதான். 2001ம் வருடமே அந்த காம்பவுண்ட் சுவர் கட்டுமானத்தை கட்டி முடித்துவிட்டதாக அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 1992ம் வருடம் முதல் சென்னையில் வசித்து வருகிறேன். நான் சென்னையில் கிரஸருக்கு தேவையான உதிரி பாகங்கள் விற்பனை செய்யும் நிறுவனம் நடத்தி வருகிறேன். 2009ம் வருடம் அளந்து பார்த்தபோது ஆக்கிரமிப்பு தெரியவந்ததாக நான் கூறும் நிலையில் அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் ஏதாவது கொடுத்தேனா என்றால் இல்லை. அவரிடம் நேரடியாக மட்டும் பேசினோம். அவ்வாறு பேசியது சம்பந்தமாக எழுத்து மூலமாக ஒப்பந்தம் ஏதாவது ஏற்பட்டதா என்றால் ஒப்பந்தம் ஏற்படவில்லை.

காலம் சென்ற 1,2 பிரதிவாதிகள் தரப்பில் அனுப்பப்பட்ட வா.சா.ஆ.6 பதில் அறிவிப்பில் ஒரு வேப்பமரம் இருப்பதாகவும், 2009 வருடத்தில் அதன் வயது 24 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறாகும். வா.சா.ஆ.6 அறிவிப்பினை மறுத்து பதில் அறிவிப்பு ஏதாவது அனுப்பினோனா என்றால் அனுப்பவில்லை. அத்ந அறிவிப்பில் 1989 ம் வருடமே அந்த காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டது என்றாலும், அந்த கட்டுமான வகைக்கு சரிபாதி தொகையை நாங்கள் பெற்றுக்கொண்டோம் என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை:** பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.